**தலைப்பு 247 – இலங்கை சுங்கம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 247 – இலங்கை சுங்கத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 அக்தோபர் 31 திகதி இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும், என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

இலங்கை சுங்கத்திற்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,056.00 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,979.79 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை சுங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 76.21 மில்லியன் எனப்படும் 3.69 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 1,956.00 | 1,892.73 | 63.27 | 3.23 |
| மூலதனம் | 100.00 | 87.06 | 12.94 | 12.94 |
| மொத்தம் | **2,056.00** | **1,979.79** | **76.21** | **3.69** |

2.2 **வருமானக் கணக்கு**

**மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

இலங்கை சுங்கத்தினால் 2016 ஆண்டிற்கு 16 வருமானக் குறியீட்டுக்காக ரூபா 700,980.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 699,872.71 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 99.84 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| **வருமானக் குறியீடு** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக மிகைத்தல்/ (பற்றாக்குறை)** |
|---|---|---|---|---|
| | **மதிப்பீட்டு வருமானம்** | **உள்ளவாறான வருமானம்** | **மிகைத்தல்/ (பற்றாக்குறை)** | |
| | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| 10.01.01.00 | 160,000.00 | 156,487.11 | (3,513.89) | (2.19) |
| 10.01.02.00 | 300.00 | 31.25 | (268.75) | (89.67) |
| 10.01.04.00 | 90,000.00 | 88,822.93 | (1,177.07) | (1.31) |
| 10.01.05.01 | 55,000.00 | 59,058.38 | 4.058.38 | 7.38 |
| 10.01.05.02 | 2,000.00 | 2,672.01 | 672.01 | 33.6 |
| 10.01.06.00 | - | - | - | - |
| 10.01.07.00 | - | 0.87 | - | - |
| 10.01.08.00 | 58,000.00 | 55,825.12 | (2,174.88) | (3.75) |
| 10.01.99.00 | - | - | - | - |
| 10.02.05.01 | 90,000.00 | 88,751.72 | (1,248.28) | (1.39) |
| 10.02.05.02 | 50.00 | - | - | - |
| 10.02.05.03 | 50,000.00 | 55,719.12 | 5,719.12 | 11.44 |
| 10.02.05.04 | 190,000.00 | 186,499.20 | (3,500.80) | (1.84) |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.02.05.99 | 4,000.00 | 3,703.56 | (296.44) | (7.42) |
| 20.03.02.17 | 130.00 | 167.13 | 37.13 | 28.46 |
| 20.03.03.01 | 1,500.00 | 2,134.25 | 634.25 | 42.27 |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

இலங்கை சுங்கத்திற்திற்குரிய 24701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள வாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 38.00 | 37.90 | 36.00 | 52.30 | 300.00 | 187.50 |

### 2.3.2 கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் பண்டங்கள் தொடர்பான செலவினங்கள் முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

இலங்கை சுங்கம் தொடர்பான கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் பண்டங்கள் தொடர்பாக செலவின முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள வாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 6.00 | 4.60 | 1.00 | 3.10 | 34.00 | 28.10 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

இலங்கை சுங்கத்தின் கீழ் காணப்பட்ட 7002/0000/00/0071/0016/000 இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 1.37 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

இலங்கை சுங்கத்தின் கீழ் காணப்படும் 03 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை திறைச்சேரி பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 10,970.69 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0018/0128/000 | 10,829.62 |
| 6000/0000/00/0002/0186/000 | 135.92 |
| 6000/0000/00/0001/0035/000 | 5.15 |
| மொத்தம் | **10,970.69** |

**2.6 கணக்காய்வு அவதானிப்பு**

இலங்கை சுங்கத்தில் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதும் கணக்காய்வு அவதானிப்புக்கள்

**3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை**

நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் இலங்கை சுங்கத்தினால் பொறுப்புக்கள் மீதான பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 272(3) பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 86.89 மில்லியன் பெறுமதியான 31 கொடுப்பனவு பண உறுதிப்பத்திரங்கள் இந்த அறிக்கைத் திகதி வரையும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. மேலும் தொடர்புடைய காசோலை எழுதப்பட்ட

நாளில் இருந்து 06 மாதங்கள் கடந்துள்ள ரூபா 11.64 மில்லியன் பெறுமதியுடைய 08 பண உறுதிப்பத்திரங்களும் அதனிடையே காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடந்த 12 வருட காலப்பகுதியில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 17,969.89 மில்லியன் தொகைக்கான தண்டப்பணம் மற்றும் விற்பனவு வருமானத்தில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மேலும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி தொடர்பான விரிவான தகவல்கள் கணக்காய்வின் போது சமர்பிக்கப்படவில்லை.

## 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

48 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிப்பதற்காக ஆண்டிற்கா 01 மாதம் முதல் 12 மாதங்கள் வரை காலதாமதம் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

## 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.4.1 கட்டாய சேமிப்பு

2015 திசெம்பர் 29 திகதிய 07/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் மூலம் 2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் எரிபொருள் செலவு விடயத்திற்கான வருடாந்த ஏற்பாடுகளில் 15 சதவீதம் மற்றும் போக்குவரத்திற்கான செலவு விடயத்தில் வருடாந்த ஏற்பாடுகளில் 10 சதவீதம் கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டுமென ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், இலங்கை சுங்கத்தினால் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தை பெற்று அந்த செலவு விடயங்களுக்கு பதிலாக காகிதாகிகளும் அலுவலக தேவைகளும் மற்றும் மின்சாரம் மற்றும் நீர் ஆகிய 02 செலவு விடயங்களின் கீழ் குறிப்பிட்ட சேமிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்தின் காரணமாக பொதுச் செலவு முகாமைத்துவத்திற்காக திறைசேரியினால் வெளியிடப்பட்டிருந்த மேற்கூறிய சுற்றறிக்கை மூலம் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுங்கத்தீர்வைகளை திருப்பி செலுத்தும் செலவு விடயத்தின் கீழ் ரூபா 10.00 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகள் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 10 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்திருந்தமையால் அந்த செலவு விடயத்திற்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில் 9 சதவீதம் முதல் 76 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சுத் தொகையொன்றினை கொண்டிருந்தது.

(இ) உள்நாட்டு பிரயாணச் செலவு விடயத்திற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 45.00 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 20 சதவீதமாகிய ரூபா 9.00 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், வருட இறுதியில் செலுத்தப்படாமல் காணப்பட்ட பிரயாணச் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 3,668,828.00 தொகை என அவதானிக்கப்பட்டது. அதனை தீர்த்த பின்னர் மேலும் ரூபா 5.00 மில்லியன் எனப்படும் 11 சதவீதம் சேமிப்பு ஒன்று காணப்பட்டமையால் மதிப்பீடு யதார்த்த அடிப்படையின் மீது தயாரித்திருந்ததென அவதானிக்கப்படவில்லை.

(ஈ) மின்சாரம் மற்றும் நீர் செலவு விடயத்தின் கீழ் 2015 ஆண்டிற்கான உள்ளவாறாக செலவுகள் ரூபா 129.00 மில்லியன் தொகை எனினும், 2016 ஆண்டிற்காக ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் ரூபா 150.00 மில்லியனுக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 19.50 மில்லியன் தொகை நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டு இருந்தது. அந்த செலவு விடயத்தின் கீழ் மேலும் ரூபா 9.00 மில்லியன் இற்கான சேமிப்பு அறிவிக்கப்பட்டு இருந்தது.

**3.5 கட்டுநிதிச் கணக்குகள்**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜுலை 14 திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் துணை கட்டுநிதி ஒன்று வழங்கிய பின்னர் குறிப்பிட்ட விடயம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த துணை கட்டுநிதி தீரக்கப்பட வேண்டுமெனினும் இலங்கை சுங்கத்தினால் 15 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,330,000 தொகைக்கான கட்டுநிதி மீதி குறிப்பிட்ட விடயம் முடிவடைந்து 51 நாட்கள் முதல் 276 நாட்கள் தினங்கள் வரையான காலவீச்சொன்று தாமதத்தின் பின்னரேயாகும்.

(ஆ) 2015 ஜுலை 14 திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 03/2015 மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் நிமித்த துணைக் கட்டுநிதி ரூபா 100,000 இற்கான எல்லையை மிகைக்கும் சந்தர்ப்பங்களில் அதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை முறைப்படி பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், ரூபா 2,021,000 தொகை பெறுமதியான கொடுப்பனவுகளுக்காக அவ்வாறு அங்கீகாரத்தினைப் பெற்றிருக்கவில்லை.

(இ) 26 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த துணைக் கட்டுநிதிகளிலிருந்து கையில் மீதியாக காணப்பட்ட ரூபா 966,809 இற்கான தொகையொன்று 20 நாட்கள் முதல் 64 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

**3.6 வைப்புக் கணக்குகள்**

-----------------------------------

(அ) 6000/0000/00/018/0128/000 இலக்கம் கொண்ட சட்டபூர்வமான கொடுப்பனவுகளுக்கான தற்காலிக வைப்புக் கணக்கு

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வைப்பு பேரேடுகளில் சமப்படுத்தும் கணக்கு ஒன்று பேணப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு வருடத்திற்குமாக பொது 71 படிவத்தில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புக்கள் பொழிப்புக் கூற்றொன்று தொடர்ந்து வரும் மாதம் முடிவடைய முன்னர் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், அவ்வாறு சமர்பித்திருக்கவில்லை.

(ii) 2010 ஜுலை 12 திகதிய 209/2010 ஆம் இலக்க பொதுக் கணக்கு சுற்றறிக்கையின் 4.3 (1) ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தினால் பேணப்பட்டு வரும் வைப்புப் பேரேடுகளில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 565(1)4 பிரிவின் பிரகாரம் வைப்பு பேரேடுகளில் ஆரம்ப மீதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6000/0000/00/0001/0035/000 இலக்கம் கொண்ட விமான மூலம் கொண்டுவரப்படும் பண்டங்களுக்காக அறவிடப்படும் வைப்புக் கணக்கு

2010 ஏப்ரல் 28 திகதிய 696 ஆம் இலக்கம் கொண்ட உள்ளகச் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தியிருந்த இந்த வைப்புக் கணக்குகளுக்காக 2010 முதல் 2016 வரையான 07 வருட காலப்பகுதிக்கான கணக்குகள் தயாரிக்கப்பட்டு 2017 ஏப்ரல் 28 திகதியன்றே கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த கணக்குகளின் கணக்காய்விற்கு இடைநேர் சான்றுகள் ஏதும் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக 2017 ஜுலை 21 திகதி வெளியிடப்பட்டிருந்த PUR/B/CUS/2016/G/21 இலக்க கணக்காய்வு ஐயவினாவிற்கும் இந்த இவ்வறிக்கை திகதி வரையும் பதில் கிடைத்திருக்கவில்லை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) 2010 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட கணக்கு தொடர்பாக முதல் தடவையாக நிதிக்கூற்றுகள் 2016 ஆண்டின் போதே கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. அதுவும், 2015 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) 2017 ஆண்டின் போது மீண்டும் 2015 ஆண்டும் உட்படக் கூடிய விதமாக நிதிக்கூற்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருந்த போதிலும் கொடுக்கல் வாங்கல்களை உறுதி செய்வதற்கு தேவையான சான்றுகள் அதனுடன் காணப்படவில்லை.

(iii) கணக்குகள் மீதான சான்றுகள் கணக்காய்வினால் பல சந்தர்ப்பங்களில் கேட்டிருந்த போதிலும் இலங்கை சுங்கத்தினால் திருப்திகரமாக பதிலளித்திருக்கவில்லை.

### 3.7 வருமானக் கணக்குகள்

வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 16 வருமானக் குறியீடுகளுக்காக மதிப்பீடுகள் தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல் கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்பித்தல் ஆகிய பங்களிப்புகள் திணைகளத் தலைவருக்கு சாட்டப்பட்டிருந்தன. அந்த வருமான குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் என அவதானிக்கப்பட்டன.

(அ) 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் இலங்கை சுங்கத்தினால் சேகரிக்கப்பட்டு வந்த மதுபான உற்பத்தி வரி, 2002 மார்ச் 22 ஆம் திகதிய 1228/14 ஆம் இலக்க நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அத்தினம் முதல் செயற்படுமுகமாக இரத்து செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இரத்து செய்வதற்கு முன்னர் மதுபான உற்பத்தி நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட வரி வருமானங்களை மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 89,26 மில்லியன் மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்து.

(ஆ) 2012 இன் 07 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை முதலீட்டு சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளில் இருந்து உள்நாட்டு சந்தைக்கு வழங்கப்படும் ஆடை அலகு ஒன்றின் மீது அறவீடு செய்யப்படும் ரூபா 25 இற்கான வரி 2016 நவம்பர் 01 திகதிய 2016 இன் 20 ஆம் இலக்க பெறுமதிகூட்டிய திருத்திய சட்டத்தின் மூலம் அலகு ஒன்றிற்கு ரூபா 75 தொகை என

திருத்தப்பட்டிருந்தது. எனினும், இலங்கை சுங்கத்தினால் திணைக்கள கட்டளை இலக்க 116 இன் கீழ் 2017 ஜூன் 14 நாள் முதல் ஆக இருந்ததுடன் இதன் காரணமாக இழக்கப்பட்டுள்ளவை என கணக்காய்வினால் கணிக்கப்பட்ட வரி வருமானம் சுமார் 166.59 மில்லியன் ஆகும்.

(இ) கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த வருமான கணக்குகளின் பிரகாரம், கூட்டுத் தொகை ரூபா 21,315.80 மில்லியன் இற்கான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. பல்வேறு அரச திணைக்களங்கள், அமைச்சுகள் இடையே ஒவ்வொரு செலவுத் தலைப்புகளின் ஊடாக தீர்க்கப்பட வேண்டிய நிலுவை வருமானங்களை தீர்ப்பதில் திருப்திகரமான நிலையில் இன்மையின் காரணத்தினால் பின்வரும் வருமானக் குறியீடுகள் தொடர்பாக நிலுவை வருமானம் பல வருட காலமாக நிலுவை வருமானம் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

(i) 2016 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 6,811.71 மில்லியன் தொகை எனப்படும் 31.96 சதவீததிற்கான உயர்ந்த பெறுமதியினை பிரதிபளிக்கும் நிலுவை இறக்குமதி வரி 2015 ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 657.18 மில்லியன் தொகையினால் அதாவது 8.79 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன் ரூபா 5,105.22 மில்லியன் தொகை எனப்படும் 74.95 சதவீதத் தொகை 2006 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பான நிலுவையாகக் காணப்படலாகும்.

(ii) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி நிலுவை வரி வருமானத்தில் இருந்து ரூபா 512.64 மில்லியன் எனப்படும் 16.44 சதவீதம் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்திருந்ததுடன் அவ்வாறு அறவீடு செய்யப்பட்டுள்ளது. 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்கான நிலுவை வரி வருமானம் என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 21,315.80 மில்லியன்தொகைக்கான ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானத்தில் 12.23 சதவீதம் எனப்படும். ரூபா 2,606.35 மில்லியன் தொகை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி வருமானத்தை பிரதிநிதிப்படுத்துவதுடன் அவற்றில் 92.00 சதவீதம் எனப்படும் ரூபா 2,390.07 மில்லியன் தொகை 2006 ஆண்டு முதல் 2012 வரையான காலப்பகுதிக்கான நிலுவை வரி வருமானம் என அவதானிக்கப்பட்டது. அந்த நிலுவை வருமான அறவீடு செய்வதில் மெதுவாக நடைபெறுவதாக அவதானிக்கப்பட்டது

(iii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானமாகிய ரூபா 21,315.80 மில்லியன் தொகையில் 6.65 சதவீதமாகிய ரூபா 1,418.20 மில்லியன் தொகை நிலுவை இறக்குமதி செஸ் வரியினை பிரதிநிதிப்படுத்துவதுடன் அவற்றில் 2006 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 1,336.10 மில்லியனுக்கான நிலுவையொன்று காணப்பட்டது. அவை ஒட்டுமொத்த நிலுவை இறக்குமதி செஸ் வரி வருமானத்தில் 94.21 சதவீதமாக இருந்தது.

(iv) 2011 ஆண்டின் போது இலதாக்கப்பட்ட பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வரியின் கீழ் 2011 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 42.42 மில்லியன் இற்கான நிலுவை வரி வருமானமொன்று அறவிப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது ரூபா 9.02 மில்லியன் மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அவை நிலுவை வருமானத்தின் சதவீதமாக 21.27 இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 33.40 மில்லியன் தொகை

ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், அந்த ரூபா 33.40 மில்லியன் 2006 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை காலப்பகுதிகள் தொடர்பாக நிலுவையாக காணப்பட்டன.

(v) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3598.06 மில்லியன் தொகைக்கான நிலுவை விஷேட வியாபார பண்ட வரி வருமானத்தில் 2006 ஆண்டு முதல் 2012 வரையான காலப்பகுதி தொடர்பான ரூபா 15.12 மில்லியன் இற்கான நிலுவை வரி வருமானமொன்று காணப்பட்டது. அதேபோல் 2016 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானமாகிய ரூபா 21,315.80 மில்லியன் தொகையில் நிலுவை விஷேட வியாபார பண்டவரி வருமானம் 16.88 சதவீதத்தை பிரதிநிதிபடுத்துவதாக அவதானிக்கப்படுகின்றது.

(vi) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 21,315.80 மில்லியன்களுக்கான ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் ரூபா 89.26 மில்லியன் எனப்படும் 0.42 சதவீதம் நிலுவை மதுபான உற்பத்தி வரியாகும் . அந்த நிலுவை மதுபான வரி வருமானத்தை குறிப்பிட்ட கம்பனியினால் செலுத்த மறுத்ததினால் 2001 ஆண்டு முதல் முன் கொண்டு வந்து காணப்படும் மீதிகளாகக் காணப்பட்டதுடன் இலங்கை சுங்கத்தினால் குறிப்பிட்ட கம்பனிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(vii) கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிலுவை பெற்றோலிய உற்பத்தி வரி வருமானம் ரூபா 731.52 எனப்படும் 29.40 இனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானமான ரூபா 21,315.80 மில்லியன் தொகையில் ரூபா 5,707.65 மில்லியன் தொகை எனப்படும் 26.77 சதவீதத் தொகையில் பெற்றோலிய உற்பத்தி வரி வருமானத்தினை பிரதிநிதிப்படுத்துகின்றது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி ரூபா 18.72 மில்லியன் தொகை ஒன்று பலவின வருமானக் கணக்கிற்கு செலவு வைத்து அப் பெறுமதியினை 2017 பெப்ரவரி 28 திகதி வருமானத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. இந்தப் பதிவுகளுக்கான காரணத்தை கணக்காய்விற்கு சமர்பித்திருந்த கொள்வழிக் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்காததுடன் கொடுக்கல் வாங்கல்களுக்கு அடிப்படையான காரணங்களும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(உ) 2015 ஜூலை 20 திகதி 01/2015 ஆம் இலக்க அரச வருமான மதிப்பீடு தயாரித்தல், சேகரித்தல், மேற்பார்வை மற்றும் அறிவித்தல் தொடர்பாக வழிகளுடன் தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம் நிலுவை அரச வருமானம் தொடர்பாக நிலைமையினை காட்டும் அரை ஆண்டு அறிக்கை தயாரித்து அந்த காலப்பகுதி முடிவடைந்த பின்னர் தொடர்ந்து வரும் மாதத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் இலங்கை சுங்கத்தினால் 2017 மார்ச் 27 திகதியன்றே குறிப்பிட்ட அறிக்கை அனுப்பப்பட்டிருந்து.

(ஊ) நிதிப்பிரமாணங்கள் 85(1)(ஆ) இன் பிரகாரம் வருமான அதிகரிப்பிற்கு அல்லது குறைவடைதலுக்காக அனைத்து பயன்தரக்கூடிய தகவல்களையும் காட்டுவதற்காக வருமானக் கணக்கீட்டு உத்தியோத்தர் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை.

(எ) நிதிப்பிரமாணம் 85(1)(இ) இன் பிரகாரம் இயலுமான அளவு யதார்த்தமான மற்றும் பிழையற்ற வருமான மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க

வேண்டுமெனினும், சுங்கத்தினால் அதன் பிரகாரம் செயற்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

**3.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று**

விடய இலக்கம் 24701 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.43 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதிக்கு 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரை கால வீச்சு கடந்திருந்தது. நிதிப்பிரமாணம் 485(4) மற்றும் 2004 அக்தோபர் 01 திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 மற்றும் 1.1.7 பிரிவுகளின் ஆலோசனைகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் மாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்களின் பின்னர் திணைக்களங்களிடையே தீர்க்கப்படாத கடன் மீதிகள் காணப்படாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டுமெனினும் 04 வருடங்களை விட மிகையான கடன் மீதிகளும் தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கான தொடர் செயல் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) 1994 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 5 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றம் பெற்று சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை காட்டும் அட்டவணையில் மாற்றம் பெற்றுச் சென்றுள்ள திகதி, மாற்றம் பெற்றுச் சென்றுள்ள அமைச்சு, திணைக்களம் ஆகிய தகவல்கள் குறிப்பிடப்பட வேண்டுமெனினும் அவ்வாறான விபரங்கள் குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வு பெற்றுள்ள மற்றும் இறந்துள்ள மற்றும் வேலை நிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் முற்பண மீதிகளை திருப்பி அறவீடு செய்தல் தொடர்பாக தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 04 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பட்டிருக்காமையால் 2016 வருட இறுதியில் முறையே ரூபா 2.44 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1.59 மில்லியன் தொகையான அசைவற்ற கடன் மீதிகள் காணப்பட்டன.

(ஈ) நீண்ட காலமாக காணப்பட்ட சேவை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 603,580 தொகை கடன்மீதி அறவீடு செய்தல் தொடர்பாக தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயதின் 4.5 அல்லது 4.6 பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திரக்கவில்லை.

(உ) 07 உத்தியோகத்தர்கள் தொடர்புடைய 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதிகள் ரூபா 416,631 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

**3.9 கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் பண்டங்கள் தொடர்பான செலவு முற்பணக் கணக்கு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்பணக் கணக்கில் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 28.09 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் ஒரு வருட காலத்தை விட கூடிய காலம் முதல் அவ்வாறு காணப்படும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21.72 மில்லியன் ஆக இருந்தது. அந்த நிலுவை முற்பணத்தினை தீர்க்கும் தொடர் செயல் நடவடிக்கை பலவீன நிலையில் காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்த முற்பணங்கள் செலுத்தும் பேரேடு மற்றும் சமர்பித்திருந்த கணக்குகளின் பிரகாரம் ரூபா 77,681 இற்கான இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டதுடன் இதற்கான காரணங்கள் அடங்கிய இணக்கக்கூற்றொன்றை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(இ) அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் உரிய முறையில் பேணப்படாமை, மேற்பார்வை போதியளவினதாக காணப்படாமை ஆகிய குறைபாடுகளின் காரணமாக 07 சுங்க விசாரணைகளக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 413,383 இற்கான முற்பணங்களில் ரூபா 297,196 தொகை தீர்த்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 381,051 இற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்த சுங்க விசாரணைகளின் விடயங்கள் முடிவடைந்து வெகுமதிப் பணம் வழங்கியிருந்த போதிலும் 2016 ஆண்டிற்கான முற்பணக் கணக்குகளில் அம் மீதிகள் தொடர்ந்தும் நிலுவை முற்பண மீதிகள் எனக் காட்டப்பட்டிருந்தது.

**3.10 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.10.1 உள்ளக் கணக்காய்வு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் DMA/2009 (1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு விடயங்களை நிறைவேற்றுவதற்காக போதியளவினதான மற்றும் பயிற்றப்பட்ட பதவியணியொன்று உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிக்கு இணைக்கபட வேண்டுமெனினும், அரச வருமானத்தில் 40 வீதத்தை அண்மித்த கூடிய பங்களிப்பினை வளங்கும் நிறுவனமொன்றான இலங்கை சுங்கத்தின் தலைமை உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி தவிர ஏனைய பதவிகள் அனைத்திற்கும் இணைந்த சேவையை சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர் பண்ணிரண்டு பேரே இணைக்கப்பட்டிருந்தன. அந்த உத்தியோகத்தர்களை 06 மாதங்கள் போன்ற குறுகிய காலம் மாத்திரம் இந்த பிரிவில் தடுத்து வைத்த பின்னர் இலங்கை சுங்கத்தில் வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றமையால் தரமான கணக்காய்வு ஒன்று மேற்கொள்வதற்குரிய திறமை குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இதன் காரணமாக நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் பயிற்சி உடைய பதவியணி ஒன்றினை ஈடுபடுத்த வேண்டிய தேவை காணப்பட்டதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.10.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

2002 செப்டம்பர் 12 ஆம் திகதி 402 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை சுங்கத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், அந்த அறிக்கை கணக்காய்வுத் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இலங்கை சுங்கம் 2017 செப்டம்பர் 26 ஆம் திகதி மேற்கூறிய அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்பித்திருந்தது.

## 3.11 சொத்துக்கள் முகாமைத்துவம்

இலங்கை சுங்கத்தின் சொத்துகள் தொடர்பாக மேற் கொண்ட தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தும் சொத்துகள்

புதிய சுங்க கட்டிடத்தில் ரூபா 21.64 மில்லியன் செலவிடப்பட்டு நிறுவப்பட்டிருந்த நுழைவு நிருவாக முறையை தற்போது எதிர்பார்த்த செயற்பாட்டு நிலைமையில் இருந்து விளகி காணப்பட்டது.

(ஆ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்

2016 ஆண்டிற்கான கணிப்பீட்டு சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும், மேற்கொள்ளப்பட்ட ஏனைய விதப்புரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 757-2 (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வெளித் தரப்பினருக்கு கொடுத்திருந்த சொத்துக்கள்

சுங்கத்தினால் சில சொத்துக்கள் முறைசாராத விதமாக வெளிதரப்பினருக்கு விடுவித்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கபட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) இலங்கை சுங்கத்திற்கு சொந்தமான வடக்கு கிழக்கு பகுதிகளில் காணப்படும் சில காணிகள் இராணுவத்தின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக உரித்தாக்குவதற்கு அல்லது உரித்தாக்கும் வேலையின் இறுதிக் கட்டத்திற்கு வந்திருக்கவில்லை.

(ii) இலங்கை சுங்கத்தினால் சட்டரீதியாக சாட்டுதல் செய்யாமல் கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு நீர்கொழும்பு முன்னக்கரையில் அமைந்துள்ள வீதவரி இலக்கம் 08 கொண்ட காணி வழங்கப்பட்டிருந்தது.

(iii) இலங்கை சுங்கத்திற்கு சொந்தமான நீர்கொழும்பு செல்பி பாதையில் மற்றும் நீர்கொழும்பு ஸ்டீவன் வோக் ஒழுங்கையில் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக உரித்தாக்கல் செய்யாமல் வெளிதரப்பினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது

(ஈ) தீர்க்கப்படாத சொத்துக்கள்

2016 திசெம்பர் 09 திகதி 252 / 2016 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்களை பிழையற்ற முறையில் வெளிபடுத்த வேண்டுமெனினும், ஒதுக்கீட்டுக் கணக்குகளுடன் காணப்படும் DGSA 8 (1) படிவத்தில் கூட்டுத்தொகை ரூபா 4.60 மில்லியனுக்கு பொறுப்புக்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**3.12 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்.**

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | |
| (i) V ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு | - | விடுமுறை பெற்றுக்கொள்ளாமல் கடமைக்கு சமூகமளிக்காத உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பாக அவ்வாறாக சமூகமளிக்காத நாள்முதல் தனது பதவியை விட்டு விளகியதாக கணிக்கப்படுவதாக பதிவுத் தபாலில் அல்லது தனிப்பட்ட முறையில் உத்தியோகத்தருக்கு கடிதம் ஒன்று ஒப்படைப்பதன் மூலம் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும் எனினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதேபோல் குறிப்பிட்ட காலப் பகுதியிலேயே அந்த உத்தியோகத்தர் உயர்பதவி ஒன்றிற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தார். |
| (ii) XV ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | 1,693,600 | திணைக்களத் தலைவர்கள் தவிர ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் விமானப் பிரயாணத்தின் போது சிக்கன வகுப்பில் பிரயாண செய்ய வேண்டுமெனினும், வெளிநாடு சென்றிருந்த ஐந்து உத்தியோகத்தர்கள் வர்த்தக வகுப்பில் பிரயாணம் செய்து குறிப்பிட்ட செலவுகளை தீர்த்துக் கொண்டிருந்தனர். |
| (iii) XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | - | சில உத்தியோகத்தர்கள் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் நேரம் தனது கையொப்பத்துடன் நாள்வரவு பதிவேட்டில் பதிவு செய்திருக்காததுடன் நாள்வரவு பதிவேடு நாளாந்தம் பதவி நிலை உத்தியோத்தர் ஒருவரின் மேற்பார்வைக்கு உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | (iv) XLVIII ஆம் அத்தியாயத்தின் 27.7 ஆம் பிரிவு | - | சிறையில் இடப்பட உத்தியோகத்தர் ஒருவருக்கு அக் காலப்பகுதிக்காக கட்டாய விடுமுறை வழங்குவதற்காக 04 மாத கால தாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 104(4) | - | 2016 ஆண்டின் போது இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 07 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த திடீர் விபத்துக்கள் தொடர்பாக தாமதமின்றி செயலாற்றியிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571(1) | - | தண்டப்பணம் மற்றும் விற்பனவு வருமானங்கள் தொடர்பாக வைப்புச் செய்யப்பட்டு இரண்டு வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் தொடர்பாக அரையாண்டு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு சமர்பித்திருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 1646 | - | வாடகை அடிப்படையில் பெற்றிருந்த இரண்டு வாகனங்களின் 2016 மே 01 முதல் 2017 ஏப்ரல் 30 வரையான காலப்பகுதி தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்த்திருக்கவில்லை. |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதி 09/2009(1) இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 02(1) பந்தி | - | அரசாங்க சேவையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் தனது உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல்களை அடையாளமிடப்பட வேண்டும். அந்த சுற்றறிக்கையை அடிப்படையாக வைத்து வெளியிடப்பட்ட 2010 பெப்ரவரி 19 ஆம் திகதிய 01/2010 ஆம் இலக்க சுங்கத் திணைக்களச் சுற்றறிக்கையின் V ஆம் பந்தியின் பிரகாரம் 2010 மார்ச் 01 ஆம் திகதி முதல் அமுலாகும் விதமாக சுங்கத் திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்ய வேண்டுமெனினும், இலங்கை சுங்கத்தில் மற்றும் அதனது உப அலுவலகங்களில் விரல் அடையாள இயந்திரம் இந்த அறிக்கைத் தினம் வரை நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 09 ஆம் திகதய 252/2016 ஆம் | - | ஒதுக்கீட்டு கணக்கிற்கு மேலதிகமாக சுற்றறிக்கையுடன் காட்டப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவு | | படிவங்களுக்கு இணங்க நிதிச் செயலாற்றுகை கூற்று, நிதி நிலைமைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்பட்டு 2017 ஜூன் 30 திகதிக்கு முன்னர் அரச கணக்குத் திணைக்களத்திற்கும் பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதிக் – கோவையின் 87 ஆம் பந்தி | - | விதித்துள்ளவாறு விவாகமான உத்தியோகத்தகர்கள் தொடர்பாக சான்றுபடுத்தப்பட்ட விவாகச் சான்றிதழின் பிரதி ஒன்று, பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகள், உத்தியோகத்தரின் விவாகம் தொடர்பாக மற்றும் பிள்ளைகளின் பிறப்பு தொடர்பாக அறிவித்தல் (விதவைகள்/ஆண்கள் அநாதைகள் ஒய்வூதியத்திற்கு) என்பன தனிப்பட்ட கோவையில் உட்படுத்தப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2007 அக்தோபர் 26 திகதிய 1520/17 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானி | - | (i) பொது நிருவாக அமைச்சு செயலாளரினை வினவி, நிதி அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவு தொகைகளுக்கு இணங்கி சுங்கத் திணைத்திளத்தின் மேலதிக நேரக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | | - | (ii) 2013 ஆண்டின் போது அது வரை செலுத்தப்பட்டு வந்த மேலதிக நேரக் கொடுப்பனவு விகிதாசாரங்களை திணைக்களத்தின் மேலதிக நேர குழுவினால் மேலும் 45 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், அதற்காக நிச்சயிக்கப்பட்ட அங்கீகாரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. |
| | | - | (iii) இலங்கை சுங்கத்தினால் தற்போது மேலதிக நேரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது 24 மணித்தியாள விடுமுறை நாள் ஒன்றிற்காக 27 மணித்தியாள மேலதிக நேரம் கொடுப்பனவு ஒன்றும் வழமையான வேலை நாட்களுக்காக 18 ¾ மணித்தியாளம் வரையின் மேலதிக நேரக் கொடுப்பனவு ஒன்றும் |

மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2010 பெப்ரவரி 19 திகதிய 01/2010 ஆம் இலக்க திணைக்கள உள்ளக சுற்றறிக்கையின் 3(iv) ஆம் பந்தி | - (i) | உத்தியோகத்தர் ஒருவர் உள்வருதலை பதிவு செய்திருந்த போதிலும் வெளிச் செல்லலை பதிவு செய்திருக்கா விடின் அந்த ஒவ்வொரு நாளுக்கும் அரை நாட்கள் உத்தியோத்தரின் விடுமுறைகளில் இருந்து கழிக்க வேண்டுமெனினும், கட்டுநாயக விமான நிலைய பிரயாணிகள் வரும் முடிவிடத்தில் அமைந்துள்ள சுங்க உப அலுவலகத்தில் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| | | (ii) | உத்தியோகத்தர் ஒருவர் ஏதேனும் கடமை ஒன்றிற்காக கடமை புரியும் இடத்திற்கு வெளியே செல்லும் போது வெளியே செல்வதனை பதிவு செய்யும் பதிவேட்டில் பதிவு செய்து பதவிநிலை உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற வேண்டுமெனினும், கட்டுநாயக விமான நிலைய பிரயாணிகளும் வரும் முடிவிடத்தில் அமைந்துள்ள சுங்க உப அலுவலகத்தில் அவ்வாறு வெளிச்செல்லல் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.13 செயலாற்றுகை**

2016 வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) வருமானம் சேகரித்தல்

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வரி வருமானம் மற்றும் உள்ளவாறான வரி வருமானம் முன்னைய ஆண்டின் வரி வருமானத்துடன் ஒப்பீடு செய்து கீழே தரப்பட்டுள்ளது.

| | 2016 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|
| | திருத்திய மதிப்பீட்டின் படி வரி வருமானம் | உள்ளவாறான வருமானம் | மதிப்பீட்டு வருமானத்தின் சதவீதமாக உள்ளவாறான வரி வருமானம் | திருத்திய மதிப்பீட்டின் படி வரி வருமானம | உள்ளவாறான வருமானம் | மதிப்பீட்டு வருமானத்தின் சதவீதமாக உள்ளவாறான வரி வருமானம |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **வெளிநாட்டு வியாபாரத்தின் மீது வரி** | | | | | | |
| இறக்குமதி வரி | 160,000 | 156,487 | 97.80 | 92,000 | 108,116 | 117.51 |
| ஏற்றுமதி வரி | 300 | 31 | 10.33 | 60 | 33 | 55 |
| துறைமுக மற்றும் விமான நிலைய வரி | 90,000 | 88,823 | 98.69 | 55,000 | 56,733 | 103.15 |
| செஸ் வரி (இறக்குமதி) | 55,000 | 59,058 | 107.38 | - | - | - |
| மோட்டார் வாகன சலுகை வரி | - | - | - | 42,000 | 42,467 | 101.11 |
| பிரதேச உட்பட்டமைப்பு வசதி வரி | - | 0.87 | - | - | 0.29 | - |
| செஸ் வரி (ஏற்றுமதி) | 2,000 | 2,672 | 133.60 | 3,400 | 2,713 | 79.79 |
| விஷேட வரத்தக பண்டங்கள் வரி | 58,000 | 55,825 | 96.25 | 56,000 | 52,275 | 93.34 |
| **உற்பத்தி வரி** | | | | | | |
| சிகரட் | 90,000 | 88,752 | 98.61 | 80,000 | 79,981 | 99.97 |
| மதுபானம் | 50 | - | - | - | - | - |
| பெற்றோலியம் | 50,000 | 55,719 | 111.44 | 34,000 | 45,091 | 132.62 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 190,000 | 186,499 | 98.16 | 240,000 | 223,414 | 93.09 |
| ஏனையவைகள் | 4,000 | 3,704 | 92.60 | 10,000 | 3,812 | 38.12 |
| ஆடைகளுக்கான உள்நாட்டு விற்பனவுகளுக்கான கட்டணம் | 130 | 167 | 128.46 | 100 | 121 | 121 |
| தண்டப் பணம் பறிமுதல் செய்தல் | 1,500 | 2,134 | 142.27 | 1,400 | 1,129 | 80.64 |
| | -------------- | --------------- | | -------------- | -------------- | |
| மொத்த கூட்டுத்தொகை | 700,980 | 699,872 | 99.84 | 613,960 | 615,888 | 100.31 |
| | ====== | ====== | | ====== | ====== | |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கம் 16 வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 699,872 மில்லியன் வருமானம் ஒன்று சேகரித்திருந்ததுடன், கடந்த ஆண்டின் போது அந்த 16 வருமானக் குறியீடுகளின் கீழ் சேகரித்திருந்த வருமானம் ரூபா 615,888 மில்லியன் ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 83,984 மில்லியன் எனப்படும் 14 சதவீததினால் அதிகரித்திருந்தது. மோட்டார் வாகன உற்பத்தி வரி, இறக்குமதி வரி, துறைமுகங்கள் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரி, சிகரட் உற்பத்தி வரி, இறக்குமதி செஸ் வரி, விஷேட வியாபார பண்டங்கள் வரி என்பவற்றில் அதிகரித்தல் இந்த வருமான அதிகரிப்பதற்கு முக்கியமாக தாக்கியிருந்தது.

(ஆ) ரூபா 50,000 மில்லியனை விடக் கூடிய மதிப்பீட்டு வருமானத்தையுடைய 06 குறியீடுகளுக்கு இடையே எதிர்பார்த்த இலக்கினை மிகைக்கக் கூடியதாக இருந்தது இறக்குமதி செஸ்வரி வருமானக் குறியீடு மாத்திரமாக இருந்ததுடன், அதன் செயலற்றுகை 107.38 சதவீதமாக இருந்தது. ஏனைய 05 வரி வருமானக் குறியீடுகள் எதிர்பார்த்த இலக்கினை நெருங்கியிருக்கவில்லை.

(இ) ஏற்றுமதி வரி வருமான குறியீடு தொடர்பாக மீளாய்வாண்டிற்கான ரூபா 50 மில்லியன் ஆரம்ப வருமான மதிப்பீடு பின்னர் ரூபா 300 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறு அதிகரிப்பதற்கு காரணமாக இருந்த தரவுகள் ஏதும் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 31 மில்லியன் தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 269 மில்லியன் வருமானப் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன் அது நூற்றுவீதமாக 89.58 சதவீதமாகும்.

(ஈ) இலங்கை சுங்கத்தினால் துறைமுகங்கள் விமான நிலைய அபிவிருத்தி வரிக்காக 2016 ஆண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 71,000 மில்லியன் தொகையாக இருந்ததுடன் பின்னர் அதனை ரூபா 95,000 மில்லியன் என அர நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிருந்தது. எனினும் உள்ளவாறான வருமானம் ரூபா 88,823 ஆக இருந்தது. இது ஆரம்ப மதிப்பீட்டை விட 25 சதவீதம் போன்ற உயர்ந்த

முரணொன்றாகும். இதன் பிரகாரம் இலங்கை சுங்கம் வருமான மதிப்பீடுகள் தயாரித்தல் தொடர்பாக கூடிய அவதானத்துடன் செயற்பட வேண்டியிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் சேகரிக்கபட்ட இறக்குமதி செஸ் வரி வருமானம் ரூபா 59,058 மில்லியன் தொகையெனினும், இலங்கை சுங்கத்தினால் 2015 ஆகஸ்ட் 14 ஆம் திகதி திறைசேரியின் அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு அனுப்பட்டிருந்த ஆரம்ப மதிப்பீட்டின் பெறுமதி என குறிப்பிடப்பட்டிருந்தது ரூபா 40,000 மில்லியன் மாத்திரமே. அதன் பிரகாரம் உள்ளவாறான வரி வருமான இந்த ஆரம்ப மதிப்பீட்டை விட 48 சதவிதம் அதிகரித்திருந்தது அவதானிக்கப்பட்டது.

(ஊ) கடந்த 04 வருட காலப்குதியில் ஏற்றுமதி செஸ் வரி வருமானம் ரூபா 3,000 மில்லியன் நெருக்கமாக இருந்த போது 2016 ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் அது ரூபா 2,000 மில்லியன் என கணிப்பதற்கு பாதித்திருந்த காரணம் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. மதிப்பீட்டு வருமானம் வழமையில்லாத விதமாக குறைந்ததன் காரணத்தினால் இந்த வருமான குறியீட்டின் கீழ் உள்ளவாறான செயலாற்றுகை 134 சதவீதம் என கூடிய பெறுமதியினை கொண்டிருந்தது. கடந்த ஆண்டு அது 79.79 சதவீததிற்கான பெறுமதியினை கொண்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கம் வருமான குறியீட்டிலக்கம் 10.02.05.04 இன் கீழ் மோட்டார் வாகன உற்பத்தி வரி என ரூபா 186,499.20 மில்லியன் தொகை வருமானமொன்றினைச் சேகரித்ததுடன் முன்னைய ஆண்டின் போது வருமானம் சேகரித்திருந்த ரூபா 223,413.69 மில்லியன் தொகை ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 36,914,.48 மில்லியன் எனப்படும் 16.52 சதவீதத்தினால் குறைந்திருந்ததென அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் உயர்ந்த வரிக் கொள்கையின் காரணமாக வாகன இறக்குமதிகள் வரையறுக்கபட்டமை இவ்வாறு வரி வருமானம் குறைவடைவதற்கு அடிப்படையாகப் பாதித்திருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தினால் ஆடைகளுக்கான உள்நாட்டு விற்பனை மீது கட்டண வருமான குறியீட்டின் கீழ் ரூபா 167.14 மில்லியன் இற்கான வருமானம் ஒன்று சேகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது சேகரித்திருந்த வருமானம் ரூபா 121.64 மில்லியன் தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 45.50 மில்லியன் எனப்படும் 37.41 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஐ) விஷேட வியாபார பண்டங்கள் வரி தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 65,000 மில்லியன் தொகையாக இருந்த ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 58,000 மில்லியன் தொகை வரை திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் விஷேட வியாபார பண்டங்கள் வரி தொடர்பாக 2015 ஆகஸ்ட் 14 திகதி அரச நிதி மற்றும் கொள்கைகள் திணைக்களத்திற்கு சமர்பித்திருந்த புதிய மதிப்பீடு ரூபா 72,000 மில்லியன்களாகும். அதன் பிரகாரம் சேகரித்திருந்த உள்ளவாறான வருமானம் ரூபா 55,825 மில்லியன் தெகையாக இருந்ததுடன் அது மதிப்பீட்டில் 77.53 சதவீதமாக இருந்தது.

(ஒ) சிகரட் உற்பத்தி வரி வருமான குறியீட்டின் கீழ் திருத்திய வருமான மதிப்பீடு மற்றும் தேறிய வருமான சேகரிப்பு இடையே வித்தியாசத்திற்கான காரணம் ஆக சிகரட் வரி அதிகரிக்கப்பட்டதினால் நுகர்வு குறைவடைதல் எனக் காட்டப்பட்டிருந்தது. எனினும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சிகரட் உற்பத்தி அலகு சுமார் 165 மில்லியனினால், குறைந்திருந்த போதிலும், வருமானம் சேகரித்தல் ரூபா 8,771 மில்லியனால் அதாவது 10.97 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. சிகரட்டுக்கான உற்பத்தி வரி மிகவும் கூடிய

விகிதாசாரத்தினால் அதிகரித்திருத்தல் இந்த வரி வருமானம் அதிகரிப்பதற்கு அடிப்படையாக பாதித்திருந்தது.

(ஓ) ஏனைய உற்பத்தி வரி தொடர்பாக கடந்த ஆண்டின் போது சேகரித்திருந்த வருமானம் ரூபா 3,812 மில்லியன் தொகையாக இருந்த போது மீளாய்வாண்டின் போது ரூபா 11,200 மில்லியன் தொகை என மதீப்பிடு செய்திருந்த ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 4,000 மில்லியன் வரை பின்னர் திருத்தப்பட்டிருந்தது. இந்த குறியீட்டின் கீழ் சேகரித்திருந்த வருமானம் ரூபா 3,703 மில்லியன் தொகையாகும். சேகரித்திருந்த வரி வருமானம் ஆரம்ப வருமானமானது மதிப்பிட்டில் 33.06 சதவீதமாக காணப்பட்டதுடன் திருத்திய மதிப்பீட்டில் 92.57 சதவீதமாகும்.

(ஔ) இலங்கை சுங்கத்தினல் ஆடைகளுக்காக உள்நாட்டு விற்பனைகள் மீது கட்டணம் எனப்படும் வருமான குறியீட்டிற்காக சமர்பித்திருந்த ஆரம்ப மதிப்பீடு ரூபா 120 மில்லியன் தொகையாக இருந்ததுடன், அதனது உள்ளவாறான வருமானம் ரூபா 167 மில்லியன்களாகும். அதன் பிரகாரம் உள்ளவாறான வருமானம் சேகரித்தல் ஆரம்ப மதிப்பீட்டில் 139 சதவீத தொகையாக இருந்தது. அதேபோல குறிப்பிட்ட மதிப்பீட்டில் இடமளிக்கக்கூடிய கட்டுபாட்டு விலகல் எல்லை குறிப்பிட்டிருக்கவில்லை.

(க) இலங்கை சுங்கத்தின் சட்டத்தினை வினைப்படுத்தும் முக்கிய பிரிவொன்றாக இருப்பது தடுத்தல் பிரிவாக இருந்ததுடன், சுங்க குற்றங்களை பிடித்தல், சந்தேகத்திற்கு இடமான பண்டங்களை பிடித்தல், சுங்க விசாரணைகள் பரிசோதனைகள் நடத்துதல் மற்றும் வழக்கு விடயங்களை செயற்படுத்துதல் என்பன அதனது முக்கிய கருமங்களாகும். 2016 ஆண்டின் போது சுங்க தடுத்தல் பிரிவின் மூலம் செயற்படத்தப்படும் பதிவு செய்யப்பட்டிருந்த விசாரணைகளின் எண்ணிக்கை 808 ஆக இருந்த போதிலும், பிழைகளை உறுதிப்படுத்தி இழக்கச் செய்தல் அல்லது தண்டம் விதிக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை 383 ஆக இருந்ததுடன் தண்டம் மற்றும் இலதாகுதல் மூலம் சேகரித்திருந்த வருமானம் ரூபா 577 மில்லியன் தொகையாக இருந்தது. எனினும் 425 விசாரணைகள் தொடர்பாக குறிப்பிட்ட விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பிழைகளை உறுதிப்படுத்தல் இலதாக்க அல்லது தண்டம் விதிக்கப்படல் ஒன்று 2016 ஆண்டின் போது மேற்கொண்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அதனூடாக அறவீடு செய்யக் கூடியதாக இருந்த வருமானங்களும் நழுவவிடப்பட்டிருந்தன.

(ங) ஏற்றமதி தயாரிப்பு வலயங்களின் விவகாரங்கள் மற்றும் துறைமுக விவகாரங்களை மேற்பார்வை செய்தல் சுங்க சட்டங்களை வினைப்படுத்தும் கொத்தனியின் கீழ் இயங்குதல் தடுத்தல் பிரிவின் பொறுப்பு ஒன்றாக இருந்த போதிலும் பலலேகலே, ஹொரணை மற்றும் மீரிகம ஏற்றுமதி தயாரிப்பு வலயங்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதி வரை சுங்கத் தடுத்தல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நுண்ணாய்வு விடயங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் அந்த வலயங்கள சார்ந்த இடங்களில் உப தடுத்தல் பிரிவுகளை நிறுவுவதற்கு அல்லது வேறு உப தடுத்தல் அலுவலகங்களில் இருந்து உத்தியோகத்தர்கள் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் திக்ஓவிடவில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகத்தின் சுங்க தடுத்தல் பிரிவின் செயற்பாடுகளும் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் ஆரம்பித்திருக்கவில்லை.

(ச) இலங்கை போதைப்பொருட்கள் விநியோகித்தல் மத்திய நிலையமொன்றாக மாறி கொண்டு வருகின்றதென அவதானிக்கப்படுவதனால் போதைப் பொருள் தடுத்தல் விவகாரங்களுக்காக UNODCWCO மற்றும் WCO வழிகாட்டலின் கீழ் கணினி மயப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுவப்பட வேண்டும் என இனங்கண்டிருந்த போதிலும் அதனது முக்கிய 4 செயற்பாடுகளையும் செயற்படுத்துவதற்காக உரிய நடவடிக்கைகளை 2017 திசெம்பர் 31 திகதி வரை

இலங்கை சுங்கத்தினால் எடுத்திருக்கவில்லை. செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) கொள்கலன்கள் பிரயாண பாதைகளை பின் தொடரும் முறையினை செயற்படுத்துதல்.

(ii) வர்த்தக கொள்கலன்களில் மறைத்து கொண்டு வரப்படும் போதைப் பொருட்களைக் கண்டு பிடிப்பதற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல்.

(iii) சந்தேகத்திற்கிடமாக கடல் பாதைகள் மற்றும் இறக்குமதியாளர்களை இலக்காக கொள்ளல்.

(iv) சந்தேகத்திற்கு இடமான கொள்கலன்கள் பரிசோதனை செய்வதற்காக தடுத்து வைத்தல்

(ஞ) இலங்கை சுங்கத்தின் வருமானம் உழைக்கும் செயலாற்றுகையை மதிப்பீடு செய்யும் போது பின்வரும் செயற்பாடுகளில் தாக்கங்களின் காரணமாக ஏற்படும் வருமான வளர்ச்சியின் அளவை செய்யக்கூடிய நடைமுறையொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

(i) வரி விகிதாசாரத்தை உயர்த்துவதன் காரணத்தினால் ஏற்படும் வரிவருமானத்தின் அதிகரிப்பு

(ii) பண்டங்கள் மற்றும் சேவைகளின் வெளிநாட்டுச் சந்தை விலைகள் அதிகரிப்பதால் ஏற்படும் வருமானத்தின் அதிகரிப்பு

(iii) செலாவணி விகிதாசாரங்களின் முரண்களின் காரணமாக ஏற்படும் வரி வருமானத்தின் அதிகரிப்பு

(iv) பல்வேறு காரணங்களினால் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளின் அதிகரிப்பின் காரணமாக ஏற்படும் வருமான அதிகரிப்பு

**3.14 வங்கிக் கணக்குகள் நடத்துவதில் குறைபாடுகள்**

**சீராக்கல் செய்யபட வேண்டிய மீதிகள்**

வங்கி நடைமுறை கணக்கு ஒன்று தொடர்பாக இலங்கை சுங்கத்தினால் 2016 திசெம்பர் மாதத்திற்காக தயாரித்திருந்த வங்கி இணக்கக்கூற்றில் காட்டப்பட்டிருந்த சிராக்கல் மீதான பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டன.

| சீராக்கல் தொடர்பான விபரங்கள் | | காலப் பகுப்பாய்வு | | | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|
| | | 06 மாதங்களை விடக் கூட ஒரு வருடத்தை விட குறைவு | ஒரு வருடத்தை விட கூட 03 வருடங்களை விடக் குறைவு | 03 வருடங்களை விடக் கூட | |
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| (i) | வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத காசோலைகள் | 106,533 | 8,784 | 4,166,667 | 4,281,984 |
| (ii) | வழங்கியிருந்த போதிலும் கொடுப்பனவுக் காக சமர்பிக்கப்படாத காசோலைகள் | 428,425 | - | - | 428,425 |
| (iii) | இணங்காணப்படாத வரவு | 741,735 | - | - | 741,735 |
| (iv) | இணங்காணப்படாத செலவு | 2,558,313 | - | - | 2,558,313 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக்கூற்றில் வைப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் தேறப்படாத காசோலைகள் என அறிவித்திருந்த ரூபா 4,166,667 இற்கான தொகை 2011 ஆகஸ்ட் முதல் முன் கொண்டு வந்து காணப்படும் மீதியொன்றாகும். இந்த பெறுமதி 2017 மார்ச் மாதத்தில் சரிசெய்யப்பட்டதாக இலங்கை சுங்கம் கூறிய போதிலும், 2017 மே மாதம் வங்கி இணக்கக் கூற்றிலும் இந்தப் பெறுமதி தொடர்ந்து தேறப்படாத காசோலைகள் என காணப்பட்டன.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இனங்காணப்படாத பெறுவனவுகள் என குறிப்பிட்டிருந்த ரூபா 2,558,313 தொகையினை முறைப் பிரகாரம் இனங்கண்டு தீர்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 741,735 தொகைக்கான இனங்காணப்படாத கொடுப்பனவுகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.15 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுடையவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது

வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) சுங்க தீர்வையற்ற மதுபான விற்பனை நிலைய விற்பனவுகள் மீது உழைக்கும் அனைத்து அந்நியச் செலவாணியினை சரியான முறையில் அந்த விற்பனை நிலையததின் பேரில் பேணப்படுகின்ற வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற வங்கிக் கணக்கு ஒன்றின் வைப்புச் செய்ய வேண்டுமெனினும், கொழும்பு துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள தீர்வையற்ற மதுபான வர்த்தக நிறுவனமொன்றினால் 2014 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை 5,193 அமெரிக்க டொலர்களும், 2015 ஆண்டின் போது 12,568 அமெரிக்க டொலர்களும் மற்றும் 2016 ஜுன் 30 ஆந் திகதி வரை 8,631 அமெரிக்க டொலர்கள் என கூட்டுத்தொகை ரூபா 26,393 அமெரிக்க டொலர்கள் (ரூபா 3,902,876) இற்கான வருமனமொன்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த தீர்வையற்ற வியாபார நிலையங்களை மேற்பார்வை விடயங்களில் ஈடுபடும் சுங்க உத்தியோகத்தருக்கு தரகுப் பணம் வழங்கப்படுவதாக அந்த கம்பனியின் கணக்காளர், தீர்வையற்ற வர்த்தக நிலையத்தின் முகாமையாளர் மற்றும் காசாளர் ஆகியோர் எழுத்து மூலம் அறிவித்திருந்தனர். அதேபோல் குறிப்பிட்ட வர்த்தக நிலையம் சேகரிக்கும் வருமானத்தினை சரியான முறையில் கணித்து வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுதா என சுங்கத்தின் கைத்தொழில் மற்றும் சேவை பிரிவு (பிணைமுறி பிரிவு) இனால் அல்லது சுங்கத்தின் வேறு ஒரு பிரிவினால் (உதா :- PCAD) அல்லது மேற்பார்வை செய்திருக்காததுடன் ஒரு சுங்க உத்தியோகத்தர் மாத்திரம் வியாபார நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஆ) சுங்க விசாரணை ஒன்றின் போது சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு பதிலாக செயற்படுவதற்காக ஆரம்ப விசாரணை உத்தியோகத்தருக்கு சுங்க கடடளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சட்ட எற்பாடுகளுக்கு PREV/EPO/1725/2015 இலக்கம் கொண்ட சுங்க விசாரணை விடயங்களுக்காக சுங்க விசாரணை அலுவலரினால் ரூபா 10 மில்லியன் தண்டமொன்று விதிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் கிடைத்திருந்த மேன்முறையீடு ஒன்றின் மீது குறித்த விசாரணை உத்தியோகத்தரின் அந்த தண்டப்பணத்தை ரூபா 3 மில்லியன் வரை குறைத்திருந்தது. எனினும் சுங்கப் பணியாளர் நாயகத்திற்கு அவ்வாறு சட்ட ஏற்பாடு காணப்படவில்லை என சட்ட மா அதிபரினாலும் எழுத்து மூலமாக சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்திருந்தார்.

(இ) 2016 ஜனவரி மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் கட்டுநாயக விமான நிலைய சுங்க அலுவலகத்தினால் சேகரித்திருந்த மொத்த வருமானம் ரூபா 314.41 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் அந்த வருமானத்திலிருந்து ரூபா 6.69 மில்லியன் தொகை சுங்க உத்தியோகத்தர்களின் மேலதிக நேர நிதியத்திற்கும், தண்டபண வருமானத்தில் ரூபா 76.13 மில்லியன் தெகை சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி செலுத்தும் நிதியத்தாரும் மற்றும் முகாமைத்துவ நட்டஈட்டு நிதியம் செலவு வைக்கப்படுகின்றமையினால் அரசாங்க வருமானத்திற்கு ஏற்பட்டிருக்கும் பங்களிப்பு ரூபா 231.59 மில்லியன் தொகை எனப்படும் சேகரித்த மொத்த வருமானத்தின் 74 சதவீதத்தை அண்மித்த பெறுமதியாக இருந்தது.

(ஈ) அரசினால் சிகரட் மீது அறவிடப்படும் வரி விகிதாசாரத்தை உயர்த்திய சந்தர்பத்தில் லங்கா புகையிலை கம்பனியின் மொத்த முகவர்கள் என உற்பத்தி வரி பிரிவில் பதிவு செய்திருந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற சிகரட் இருப்புகளுக்கான வரி அறவீடு செய்யாமையின் காரணமாக அரச வருமானத்திற்கு பாரிய அளவில் இழப்பு ஒன்று ஏற்பட்டிருந்த போதிலும், 1990 ஆண்டு முதல் சிகரட் வரி விகிதாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்திய 37 சந்தர்பங்களில் ஒரு சந்தர்பத்திலேனும் குறிப்பிட்ட இருப்பு மீது சீராக்கல் செய்யபட்ட வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்றல் அலுவலகத்திற்கு கடல் மற்றும் தரை மார்க்கமாக கிடைக்கும் தபால் பொதிகளை திறத்தல், வகைப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பன சுங்க உத்தியோகத்தர்களின் பங்குபற்றலொன்று இன்றி அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றமையால் சுங்க வரி அறவிடபட வேண்டிய அல்லது இறக்குமதி தடைசெய்யப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட தபால் பொதிகள் வரி அறவிடப்படல் பறிமுதல் செய்யப்படாமலும் அகற்றிச் செல்வதற்கு இயலுமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஊ) மத்திய தபால் பரிமாற்றல் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சுங்க உத்தியோகத்தர்களினால் சிறிய பொதிகள் தொடர்பாக தெரிவு பரிசோதனை ஒன்று மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் கூடிய பெறுமதியுடைய சிறு பண்டங்கள் சுங்கவரி அறவீடு செய்யபடாமல் விடுவிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் காணப்பட்டதுடன், தொகை மதிப்பினை ஈடுசெய்யக் கூடிய விதமாக முறையான தெரிவு முறைமையொன்றினை பயன்படுத்தி குறிப்பிட்ட தெரிவினை தெறிவு செய்து பரிசோதனை செய்யும் நடைமுறையொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. இதற்காக நவீன தொழில்நுட்பத்தை பொருத்தமான விதத்தில் பிரதியீடு செய்தலும் நடைபெற்றிருக்கவில்லை.

(எ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் தனது நியமனம் செய்யும் நிபந்தனையின் பிரகாரம் சேவையினை நிரந்தரபடுத்துவதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய தகைமை ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக அன்றி தகுதிகாண் நிலையிலுள்ள அலுவலர் ஒருவரை கல்வி அல்லது பயிற்சிக்காக வெளிநாட்டுக்கு அனுப்ப இயலாது எனினும் அதற்கு முரணாக தகுதிகாண் காலப்பகுதியில் இருக்கும் உதவி சுங்க அத்தியட்சக உத்தியோகத்தர் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற 13 வார ஆங்கில பாடநெறி ஒன்றிற்கு பங்குபற்றுவிக்கப்பட்டிருந்தது.

(ஏ) கடந்த ஆண்டுகளின் போது அரச நிறுவனங்களுக்கு பண்டங்கள் இறக்குமதி செய்த போது வெளிபடுத்தப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு சுங்கத் தவறுகள் தொடர்பாக சுங்க விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு பாரிய அளவில் தண்டம் விதிக்கப்பட்டிருந்தது. அந்த தண்டப் பணங்களில் 70 சதவீதம் சுங்க உத்தியோகத்தர்களுக்கான வெகுமதியாக வழங்கப்படுதல் மற்றும் அவர்களின் நலன்புரி நிதியமொன்றிற்கு செலவு வைத்தல் தொடர்பாக பல கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இலங்கை சுங்கத்தினால் மேல் கூறப்பட்டிருந்த சுங்க விசாரணை ஒன்று தொடர்பான கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் அதனது செயற்பாட்டு விடயங்களுக்காக 2011 ஆண்டின் போது இறக்குமதி செய்திருந்த ரூபா 11,493.83 மில்லியன் தொகை பெறுமதியான 36 பாரம் தூக்கிய பொறிகளுக்காக சுங்கக் குறிப்புகள் சமர்பித்திருக்கவில்லை. ரூபா 916.53 மில்லியனுக்காக வரித் தொகையும் செலுத்தியிருக்கவில்லை. இந்த இயந்திரங்களை இறக்குமதி செய்த சந்தரப்பத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டு வரை குறிப்பிட்ட வரித்தொகையை பெற்றுக் கொள்வதற்கும் முடியாதிருநதது.

(ii) இந்த 36 பாரந்தூக்கி இயந்திரங்கள் சுங்கக் குறிப்புக்கள் சமர்பித்திருக்காமை மற்றும் வரி செலுத்தாமை தொடர்பாக 2013 ஆண்டு முதல் எல்லா

பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கும் முன்னேற்ற அறிக்கை ஒன்றின் மூலம் அறவிப்பதற்கு அதிகாரசபையின் பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பண்ட முகாமைத்துவம்) இனால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்த அதிகார சபையின் அங்கத்தவர் ஒருவராக கடமையாற்றும் சுங்க பணியாளர் நாயகம் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) இந்த சுங்கத்தின் குற்றத்திற்காக 2016 ஆண்டின் போது மேற்கொள்ளபட்ட சுங்க விசாரணையின் பின்னர் 2017 ஜூன் 02 ஆம் திகதி இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் ரூபா 1,580.10 மில்லியனிற்கான பறிமுதல் செய்தல் மற்றும் தண்டப் பண அறவீடு செய்வதற்காக விதிக்கப்பட்டிருந்தது. சுங்க கட்டளைச் சட்டத்தில் காணப்படும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறு அறவீடு செய்வதற்காக விதிக்கப்பட்டிருந்த தொகையில் 70 சதவீதம் அதாவது ரூபா 1,106.07 மில்லியன் தொகை சுங்க உத்தியோகதர்களுக்கு வெகுமதி வழங்கப்படுவதற்கு மற்றும் சுங்க உத்தியோகத்தர்களின் நலன்புரி விடயங்களுக்காக நிறுவப்பட்டுள்ள சுங்க முகாமைத்துவ மற்றும் நட்டஈடு நிதியத்திற்கு செலவு செய்வதற்காக வசதிகள் காணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது.

(iv) கடந்த ஆண்டுகளின் போது மின்சாரசபை மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் தொடர்பாக அவ்வாறான சுங்க விசாரணை ஒன்று நடாத்தி ரூபா 266.02 மில்லியனிற்கான தண்ட பணமொன்று அறவீடு செய்வதற்கும், அந்த தண்ட பணத்தில் 70 சதவீத தொகை என அதாவது ரூபா 186.21 மில்லியன் தொகை சுங்க உத்தியோகத்தர்களுக்கான வெகுமதி வழங்கப்படுவதற்கு மற்றும் அவர்களின் நலன்புரி விடயங்களுக்காக நிறுவப்பட்டுள்ள முகாமைத்துவ மற்றும் நட்டஈடு நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(v) நீண்ட காலமாக நட்டத்துடன் செயற்படும் அரச நிறுவனங்களை நடத்துவதற்கு வருடாந்தம் பாரிய தொகையினை திரண்ட நிதியத்திலிருந்து செலவீடு செய்யும் நிலைமை காணப்படும் போது அந் நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் தண்டப் பணம் விதித்து அறவீடு செய்வதனால் அந்த நிறுவனங்கள் நிதி நெறுக்கடிகளுக்கு ஆளாவதற்கான வழிகள் காணப்படுகின்றன.

(vi) மேற்கூறிய நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் தவறுகள் மற்றும் தாமதங்கள் காரணமாக ஏற்படும் வரி நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிகப்பட்டது.

(vii) உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் தவறுகளுக்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் எதிர்காலத்தில் அவர்கள் திட்டமிட்டு செயற்படக் கூடிய ஆபத்து நிலையொன்று காணப்பட்டது.

**3.16 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல் முறைசார் விதம் அன்றிக் காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) கொழும்பு துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள தீர்வையற்ற மதுபான விற்பனை நிலையமொன்றில் பௌதீக இருப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது 12 வகையான வெளிநாட்டு மதுபானங்கள் சேர்ந்த ரூபா 149,796 பெறுமதியுடைய 60 போத்தல்களுக்கான பற்றாக்குறை ஒன்று வெளிப்படுத்தப்பட்டதுடன் அந்த பெறுமதி மீது இழந்துள்ள வரி வருமானம் ரூபா 276,578 தொகையை அண்மித்த தொகையொன்றாகும். பின்னர் பணம் செலுத்தும் பொருத்தத்தின் கீழ் மதுபானங்கள் எடுத்து செல்வதற்காக சுங்க உத்தியோகத்தர்களுக்கு இடமளித்திருந்த காரணத்தினால் இந்த பற்றாக்குறை காரணமாகயிருந்ததென எழுத்து மூலம் அறிவித்திருந்தனர்.

(ஆ) முதலீட்டு சபையில் பதிவு செய்திருந்த நிறுவனங்களுக்கு 05 வருடங்கள் வரை முற்றான வருமான வரி சலுகையும் அதன் பின்னர் இரண்டு வருடங்களுக்காக 10 சதவீத வரிச் சலுகையும் அதன் பின்னர் ஆண்டுகளுக்காக 15 சதவீத சலுகை அடிப்படையில் வரிச் வீதங்களின் கீழும் வருமானங்கள் செலுத்தக் கூடிய விதமாக வரி சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறு வரிச் சலுகை வழங்கப்படும் நிறுவனங்களில் மொத்த உற்பத்தியில் 80 சதவீதத் தொகை ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமெனினும், அந்த நிறுவயங்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளில் அடங்கியிருந்த போதிலும், இது தெடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படுவதற்கான முறையான நடைமுறையொன்று இலங்கை சுங்கத்தில் செயற்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) கிரே லயின் II என்ற கொள்கலன்கள் விடுவிப்பு மத்திய நிலைத்தில் கொள்கலன்களை விடுவிக்கும் போது முறையான நடைமுறையொன்று கடைபிடிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக அரச வருமானங்கள் பாரிய அளவில் இழப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது என சந்தேகத்தை கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது. தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட அவ்வாறான குறைபாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(i) விசாரணை குழுவை நியமனம் செய்தல், விசாரணை முறையினைத் தீர்மானித்தல் மற்றும் கொள்கலன்களை விடுவித்தல் என்பன ஒரே உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல்.

(ii) விசாரணை குழுவில் இருக்க வேண்டிய குறைந்த அளவினர் ஆவது அமைப்பினர் பேணப்பட்டிருக்காமை.

(iii) கொள்கலன்களை வழமையல்லாத விதமாக குறுகிய காலத்தில் விடுவித்தல்.

(iv) கொள்கலன்களின் விடுவித்தல் விடயங்கள் வழமையல்லாதவாறு தாமதமடைதல்.

(v) விடுவிப்பதற்காக கிடைக்கக்கூடிய கொள்கலன்களின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப கொள்கலன்களின் பரிசோதனை மேற்கொள்ள நடைமுறையிலுள்ள தொழில்நுட்ப மற்றும் நவீன நடைமுறைகளுடன் நவீன மயப்படுத்தப்படாமை.

(vi) பாதுகாப்பு கமராக்கலின் மூலம் உரிய மேற்பார்வையொன்று நடைபெறாமை.

(vii) அலுவலகப் பகுதிகள் பாதுகாப்பு கமராக்களினால் மேவகை செய்யப்படாமை.

(viii) கணணி முறை மூலம் தீர்மானிக்கப்படும் பரிசோதனை மேற்கொள்ளும் நடைமுறை விடுவிக்கும் மத்திய நிலைத்தில் வித்தியாசப்படல்.

**3.17 நாட்டங்கள் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கெள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 32.20 மில்லியனுக்கான சுங்க வரி வருமான முறைகேடு ஒன்று மேற்கொண்டிருந்த இலங்கை முதலீட்டு சபையின் கீழ் பதிவு செய்திருந்த நிறுவனமொன்றிற்கான தண்டப்பணமொன்று விதிக்கும் போது இழக்க நேரிட்டிருந்த வரித்தொகை தொடர்பாக கவனம் செலுத்தாமல் ரூப 17 மில்லியன் தண்டப்பணமொன்று மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 15.20 மில்லியனுக்கான வரி வருமானம் ஒன்றினை இலங்கை சுங்கம் இழந்துள்ளது.

(ஆ) இலங்கை முதலீட்டு சபையின் கீழ் பதிவு செய்திருந்த நிறுவனமொன்றினால் உரிய சுங்க வரியினை செலுத்தாமல் மீன் இருப்பினை உள்நாட்டு சந்தைக்கு வழங்கியிருந்த காரணத்தினால் இலங்கை அரசு இழந்துள்ள வரி வருமானம் ரூபா 27.10 மில்லியன் தொகையாகும்.

(இ) கடுநாயக்க விமான நிலையத்தில் பிரயாணிகள் விமான முடிவினை பயன்படுத்தி சாரிகள், சல்வார்கள், ஆடைகள், மகளிர் பாதணிகள், கணினி துணைக் கருவிகள், வாகன உதிரிப் பாகங்கள் என்பன வர்த்தக நோக்குடன் கொண்டு வரும் போது அந்த பண்டங்களின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக முறையான நடைமுறையொன்று கடைபிடிக்காமையால் அரசுக்கு கிடைக்க வேண்டிய வரி வருமானமொன்றினை இழத்தல் நேரிடுகின்றது என கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்படிருந்தது. சில பிரயாணிகள் ஒரு ஆண்டின் போது 90 தடவைகளுக்கு மேலாக வர்த்தக பண்டங்கள் கொண்டு வருவதற்காக வெளிநாட்டு பிரயாணங்களில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் 2016 ஆண்டின் போது விமானம் மூலம் 60 நபர்களினால் 1,533 சந்தர்பங்களில் இவ்வாறு வர்த்தக நோக்குடன் பண்டங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. இந்த நிலைமையினை பலவினப்படுத்தாமையால் வரி வருமானத்தினை இழப்பதைப் போலவே சந்தையில் நியாயமான அடிப்படையில் வரி செலுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிகள் பலவீனமடையக்கூடியதாக உள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை சுங்கத்தினால் ரூபா 859,500 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த 07 விரல் அடையாளமிடும் இயந்திரங்கள் இதுவறை காணாமல் போயிருந்தன.

**3.18 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டுநாயக சர்வதேச விமான நிலையத்தில் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் நடத்தப்பட்டு வரும் தீர்வைகள் இன்றிய மதுபான விற்பனை நிலையங்களில் அலுவல்கள் தொடர்பாக இலங்கை சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மேற்பார்வை விடயங்களில் காணப்பட்ட பலவீனங்கள் தொடர்பாக கடந்த கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டப்பட்டது. கொழும்பு துறைமுகத்திலுள்ள தீர்வை இன்றிய கடை ஒன்று தொடர்பாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது மேலும் அவதானிக்கப்பட்ட அவ்வாறான குறைபாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(i) விற்பனவு இன்வொயிஸ் வழங்கப்படாமல் மதுபானம் வழங்கப்பட்டுள்ளது.

(ii) வெளிநாட்டவருக்கு அல்லது கப்பல் பதவியணியினர் தவிர ஏனைய தரப்பினருக்கு மதுபான விற்பனவு செய்வதை தவிர்க்கும் பலமான நடைமுறையொன்று அறிமுப்படுத்தியிருக்கவில்லை.

(iii) மதுபானங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இணைந்த கிட்டங்கியில் இருந்த விற்பனை நிலையத்திற்கு எடுத்துச் செல்லல் சுங்க உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் அவ்வாறு மேற்பார்வையின்றி மதுபானங்கள் எடுத்ததுச் செல்லப்பட்ட சந்தர்பங்களும் காணப்பட்டன.

(iv) கப்பல் பணிமுதல்வர் ஒருவரின் விண்ணப்பத்தின் பிரகாரம் குடிவரவு குடியகல்வுத் திணைக்கத்தினால் வழஙகப்படும் அனுமதி பத்திரமொன்றினை அடிப்படையாக கொண்டு மதுபானம் வழங்கிய பின்னர் அந்த அனுமதிபத்திரத்தை இரத்து செய்வதற்கு தரப்பினர் எவரும் முன்வராமை மற்றும் அந்த அனுமதிப் பத்திரத்தினை அடிப்படையாக வைத்து மீண்டும் மீண்டும் மதுபானம் கொள்வனவு செய்வதற்கு இயலுமாக இருந்தது.

(v) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுங்க இணைந்த கிட்டங்கிகளில் மற்றும் தீர்வையற்ற விற்பனை நிலையங்களில் பேணப்பட வேண்டிய (CCTV) கமரா முறைமைகள் செயலிழந்து காணப்பட்டன.

(vi) சொக்லட், வாசனைப் பொருட்கள், சிகரட் ஆகிய பண்டங்களும் வரி விடுதலை வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதுடன் அந்த பண்டங்களுக்கும் 04 பிரதிகளைக் கொண்ட இன்வொயிஸ்கள் தயாரித்திருக்கவில்லை.

(v) சுங்கத் திர்வை விடுதலை விற்பனை நிலையங்களை நிருவகிப்பதற்கு முறைபாடியான சுற்றறிக்கை ஆலோசனை வழங்கப்பட்டிருக்காமை மற்றும் உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் மற்றும் விதிக்கப்பட்டவைகள் நாளதுவரையாக்கப்படவில்லை.

(ஆ) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் உரிய நியமங்களுக்கு இணங்க காணப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை சுங்கத்தினால் பல்வேறு நிறுவனங்களில் இருந்து சான்றிதழ்கள் பெற்றுக் கொள்கின்றன. அந்த சான்றிதழ்கள் கிடைக்கும் வரை இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களை இறக்குமதியாளர் இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக இலங்கை சுங்கத்தினால் செயற்பட்டிருந்த சந்தர்பங்கள் காணப்பட்ட போதிலும் அந்த சான்றிதழ் கிடைக்கும் வரை குறிப்பிட்ட பண்டங்களை நுகர்வுக்கு பயன்படுத்துவதற்கு அல்லது சந்தைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என பரிசோதனை மேற்கொள்வதற்கான முறையான நடைமுறையொன்றை இலங்கை சுங்கத்தினால் கடைபிடித்திருக்கவில்லை. இது தொடர்பாக தெரிவுக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 1,200 சந்தர்பங்களில் 937 சந்தர்பங்களிலும் அவ்வாறு சுங்க மேற்பார்வைக்கு ஆளாகியிருந்ததாக அல்லது தொடர்செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்படவில்லை.

மேலும் தனியார் பிணை முறிகளின் மீது இறக்குமதியாளர்களுக்கு விடுவிக்கப்படும் இந்த பண்டங்களுக்கான பிணைமுறிகளை விடுவிப்பதற்கு முன்னர் மீண்டும் அவர்களுக்கே இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களை வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இவ்வாறு முன்னர் பெற்றுக் கொண்ட தனியார் பிணைகளை விடுவிக்காமல் இருக்கும் போது ரூபா 241 மில்லியன் தொகை பெறுமதியான

பண்டங்களை மீண்டும் தனியார் பிணைமுறிகளின் மீது விடுவிகைப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) இலங்கை சுங்கத்தின் சம்பளங்கள் வழங்குதல் தொடர்பாக நடைமுறையிலுள்ள உள்ளக கட்டுப்பாட்டு பலவீனம் காரணமாக சம்பளமின்றி வெளிநாடு சென்றிருந்த இரண்டு உத்தியோகர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 297,356 தொகை ஒன்று சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தப் பணத்தை திருப்பி அறவிடப்பட்டிருந்ததென கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான இலங்கை சுங்கத்தில் மேலதிக நேர செலவு ரூபா 567.09 மில்லியன் ஆகும். மேலதிக நேர வேலைக்கு ஈடுபடுத்தல் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக இலங்கை சுங்கத்தினால் செயற்படுத்தப்படும் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை மிகவும் பலவீன நிலையில் காணப்பட்டதுடன் அதன் காரணமாக மேலதிக நேர சம்பளப் பதிவேட்டில் கையொப்பமிடுவதன் மூலம் மாத்திரம் மேலதிக நேர வேலை உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. இந்த உள்ளக கட்டுப்பாட்டு பலவீனம் தொடர்பாக பல வருட காலமாக கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் இந்த நடைமுறையினை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை ஏதும் இதுவரை எடுத்திருக்கவில்லை.

(உ) அஞ்சல் சுங்க அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள சுங்க பரிசோதனை உத்தியோகத்தர்களின் மற்றும் மத்திய அஞ்சல் பறிமாற்றம் சுங்க அலுவலகத்தின் பெறுமதி மதிப்பீட்டுப் பிரிவில் கடமையாற்றும் சுங்க பரிசோதனை உத்தியோகத்தர்கள் கடுகதி அஞ்சல் பிரிவிற்கான மேலதிக நேர பதிவேட்டில் கையொப்பமிட்டு அந்த பிரிவில் இருந்து குறிப்பிட்ட மேலதிக நேரப் படி பெற்றுக் கொள்வதாக அவதானிக்கப்பட்டது.

## 3.19 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளவாறான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 329 | 281 | 48 |
| (ii) | இரண்டாம் நிலை | 987 | 593 | 394 |
| (iii) | மூன்றாம் நிலை | 1152 | 865 | 287 |
| (iv) | ஆரம்ப நிலை | 505 | 429 | 76 |
| | **மொத்தம்** | **2973** | **2168** | **805** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளபடுகின்றன.

(அ) இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மூலம் அரச வருமானத்திற்கு போதியளவு பங்களிப்பு ஒன்று கிடைத்திருந்த போதிலும், இலங்கைச் சுங்கத்தினால் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் அடங்கிய கொள்கலன்களை பரிசோதனை செய்யும் அலுவல்களை முறைப்படியாக மற்றும் போதியளவினதாக மேற்கொள்வதற்காக போதியளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்த வேண்டுமெனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை சுங்கத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் இணைத்துள்ள உத்தியோகததர்கள் எண்ணிக்கை தொடர்பான தகவல் பதிவேடு ஒன்று மனிதவள முகாமைத்துவப் பிரிவினால் அல்லது நிருவாகப் பிரிவினால் பேணப்பட்டிருக்காமையால் அவ்வவ் பிரிவுகளின் தேவைக்கு ஏற்றவிதத்தில் உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தனர் என உறுதிபடுத்துவதற்கு தேவையான போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்லேகலே, ஹொரனை, மீரிகமை ஆகிய இடங்களில் அமைந்துள்ள அண்மித்து ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களுக்கு மற்றும் திக்ஓவிட மீன்பிடி துறைமுகத்தில் சுங்க தடுப்பு விடயங்கள் மேற்கொள்வதற்கான இந்த அறிக்கைத் தினம் வரை உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல் உத்தியோகத்தர்களால் பரிசோதனை செய்யப்பட்ட கப்பல் பண்டங்களுக்காக வேறு உள்ளக நுண்ணாய்வாளர்கள் காணப்படவில்லை.